[illegible] [illegible]

[illegible] 16 [illegible] 9

2 [illegible] 1933

1932, 1964, 1952,
1951, 1933, 1973,
1980. and END

[illegible]
ஜ211, N02G5
N33. 16.9.
210471

OFFICE OF THE REGISTRAR
11 AUG 1933

இனி, முன்னொருகால் அன்பினால் உருகி ஒன்றுபட்ட நேய உள்ளம் உடையரான நண்பர் இருவர், பின்னொருகால் நேர்ந்த பிழைபால் ஒருவரை யொருவர் வெறுத்துப் பிரிந்துபோதலும் ஆங்காங்குக் காண்கின்றோம். அங்ஙனம் அவர் பிரிந்துபோயினும், அவரிருவருள்ளமுந் தூயவாயிருப்பின், அவரது பழைய நேய உணர்ச்சி அவ்விருவர்க்குங் கனவின்கட் டோன்றி, அவரை மீண்டும் ஒருங்குகூட்டி அளவளாவச் செய்தலும் ஒரோவழி நிகழா நிற்கின்றது. இதனை மெய்ப்படுத்தும் ஓர் உண்மை வரலாற்றினை ஈண்டு எடுத்துக் காட்டுதும். "கிறித்துவருலகு" என்னும் வெளியீட்டுக்கு ஒருவர் எழுதியது வருமாறு:

"நாற்பது ஆண்டுகளாக எனக்கு நண்பராயிருக்கும் ஒருவர் அமெரிக்கா தேயத்தில் இருக்கின்றார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நேர்ந்த ஒரு பிசகால் எமக்குள் மனவேற்றுமையுண்டாகக் கடிதப் போக்குவரவு அடியோடு நின்றுபோயது. அங்ஙனமிருக்க 1898-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் ஒருநாளிரவு மிகவுந் தெளிவான ஒருகனாக் கண்டேன். எனக்கு ஐயாயிரமைல் தொலைவானதோர் இடத்திலிருந்த என் பழைய நேயரைப்பற்றி அப்போது யான் நினைவுகூர்தற்கு ஏதொரு காரணமும் இல்லாதிருந்தும், அவர் பழமைபோல் எனக்கெதிரே வந்துநின்று, ஏதோ முன்னுண்டான ஒருபிசகால் தமக்குள் நேர்ந்த பிரிவினைக்காகத் தாம் பெருந்துயர் கூர்வதாற், 'போனது போக' இனிமேல் நாம் முன்போல் அன்பாயிருத்தலே செயற்பாலதென ஆற்றாமையொடு மொழியக்கேட்டு, அவரும் யானும் மீண்டும் ஒருமித்து அளவளாவுவதாக எனது கனவிற் கண்டேன். கண்டு விழித்துப் பார்க்க அஃதொரு வெறுங்கனவாதல் தெரிந்து ஏமாந்தேன்.

"ஆனால், இரண்டு கிழமைகள் கழித்து, அதே நண்பரிடமிருந்து எனக்கு வந்தகடிதம் பெரியதோர் இறும்பூதினை விளைவித்தது. அக்கடிதத்தில் அவர் 'யான் நும்மைப்பற்றி ஒருவியப்பான கனவுகண்டேன். பதினைந்து ஆண்டுகளுக்குமுன் நீர் என்னிடம் எவ்வளவு அன்புடன் அளவளாவினீரோ அவ்வளவு அன்புடன் அளவளாவிப், போனதுபோகவென்று அதிற் கூறக் கண்டேன். அதன்கருத்து இன்னதென அறிந்திலேனாயினும், நும்மைக் காணும் பொருட்டே இங்கிலாந்திற்குப் புறப்படுகின்றேன். யான்

210471.
11, No2
N33.169

கனவிற் கண்டபடியே நிறைவேறுமென நம்புகின்றேன்' என வரைந்திருந்தனர். அதன்படியே அவர் என்பால் வர, அவரும் யானும் எமது கனவைப்பற்றி ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டோம். யாங்கள் குறித்துவைத்திருந்த குறிப்புகளை ஒத்திட்டுப் பார்க்கையில், அக்கனவுகள் இரண்டும் ஒரேதன்மைய வாய்மட்டும் இன்றி ஒரே நேரத்தில் இருவர்க்குந் தோன்றினவை களாகவும் இருத்தல் அறிந்தேம்'' என்பது.

இனித், தீராக் கொடுநோய் கொண்டு வருந்துவார் சிலர்க்கு அது தீர்க்கும் மருந்து கனவின்கண் அறிவிக்கப்படுதலும், ஆங்காங்கு நிகழாநிற்கின்றது. இங்ஙனம் நிகழும் அறிவிப்பு, நோய் கொண்டாரின் அறிவு கனவுடம்பின்கண் ஒரோவழி மாசு நீங்கி விளங்குதலால் அதுதன்னினின்றே புலனாகின்றதோ, அன்றி ஆவி வடிவின்கண் உலவும் நல்லோரே இரக்கம் மிகுதியால் அந்நோய் கொண்டார் கனவிற்றோன்றி அது தீர்க்கும் மருந்தை அறிவித்துச் செல்கின்றனரோ, அன்றி நோயாளிக்கு உறவினராய் உள்ளார் அவர்படுந்துயரை நினைந்து அதனைத் தீர்த்தற்குரிய மருந்தினை ஆராயும் நல்லறிவே அந்நோயாளியின் கனவின்கட் டோன்றி அதனை யொழிக்கும் வழி காட்டுகின்றதோ, அம் மூன்றில் இது தான் உறுதியென்று தீர்மானித்தல் இயலாததா யிருக்கின்றது. என்றாலும் இத்தகையதோர் அறிவிப்பு நோயாளியின் கனவின் கட்டோன்றுதலும், அவ்வறிவிப்பின்படி செய்ய அவர்க்கு அந் நோய் நீங்குதலும் மறுக்க ஏலாத உண்மை நிகழ்ச்சிகளாய் ஆங்காங்குக் காணப்படுகின்றன. "உடல்நலத் தூதுவன்'' என்னும் வெளியீட்டின் ஆசிரியரும் புகழ்பெற்ற அமெரிக்க மருத்துவரு மான ஹால்புருக் என்பவர் தமக்குவந்த கொடியதோர் இருமல் நோய் தீர்ந்த வரலாற்றினைப் பின்வருமாறு எழுதி அறிவித்திருக் கின்றார் :—

"1870-ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் யான் மிகக் கொடியதோர் இருமல்நோயாற் பற்றப்பட்டேன். ஒவ்வொருகார் காலத்தும் இளவேனிற்காலத்தும் அந்நோய் என்னைத் தொடர்ந்து பற்றிப் பல்லாண்டுகள் துன்புறுத்திவந்தமையால், அதுநாட்பட்ட நோயாய் வேரூன்றி விடுபோமெனவும், அதுவே எனதுயிர்க்கு இறுதியாய் முடியுமோ வெனவும் பெரிதும் உளங்கலங்கி

னேன். அப்போதுயான் இளைஞனாய் இருந்தமையாலும், நீண்ட காலங் கைக்கொண்டு ஒழுகத்தக்கதொரு தொழிலை அப்பொழுது தான் யான் மேற்கொண்டமையாலும், எனது வருங்கால நிலையினைத் தெரிந்து மிகவுஞ் சோர்வடைந்தேன். இவ்வாறு சோர்வு கொண்ட நிலையில் ஒருகால் உறக்கங்கொண்டேன்; ஆனாலும், அஃது ஆழ்ந்த துயில் அன்று; அப்போது, பிற் சொல்லப்படும் நிகழ்ச்சியானது இன்னும் என்மனத்தைவிட்டு அகலாதபடியாய்த் தோன்றலாயிற்று. இருபஃது ஆண்டுகளுக்கு மேலாக இறந்து பட்டமையால், ஏறக்குறைய எனது நினைவைவிட்டு நீங்கிப்போன என் உடன்பிறந்தாள் எனது படுக்கை யண்டை வந்து நின்று, "நின் உடல்நலத்தைப்பற்றி நீ கவலைப்படாதே; யாம் அந்நோயை நினக்குத் தீர்க்கவந்திருக்கின்றேம்; இன்னும் நீ உலகத்திற் செய்ய வேண்டுவது மிகுதியாய் உள்ளது.'' எனக் கூறினள். அவ்வாறு கூறியபின் அவள் மறைந்துபோயினள். ஒரு மின்னாற் பொறி (Electric battery) யிலிருந்து தோன்றிய மின்னாற்றல் எனது மூளையினூடுருவி நிறைந்தாலென எனக்கு ஓர் உணர்ச்சி தோன்றியது; ஆனாலும், அஃது எனக்குத் துன்பமாயில்லாமல் இன்பமாகவே காணப்பட்டது. அவ்வாறு திடுமெனத் தோன்றிய அம்மின்னாற்றல், மூளையிலிருந்து கீழ் இறங்கிப் பரவலாயிற்று; என்னுடைய நெஞ்சிலும் மூச்சுப்பையிலும் அது மிக்க வலிவுடன் நிரம்பிநிற்றலுணர்ந்தேன். பின்னர் அங்கிருந்து அது கைகால் முனைகள்வரையிற் பரவவும், அம்முனைகளில் அஃது இனிதாய்ச் சுடர்ந்து எரியவுங் கண்டேன். உடனே யான் அத்துயில் நீங்கி விழித்தேன்; விழித்ததும் யான் முழுநலம் பெற்றிருத்தல் அறிந்தேன். அதுமுதல் அந்நோய் எனக்குத் திரும்ப வந்ததே யில்லை. என் உடன்பிறந்தாளின் உருவம் அத்துணைத் தெளிவாக எனக்குத் தோன்றாவிட்டாலும், அவளது குரலொலி மட்டும் மிகவுந் தெளிவாய்க்கேட்டது. இதற்கு முன்னும் பின்னும் இத்தகையதொரு நிகழ்ச்சி எனக்குத் தோன்றியதே யில்லை.'' என்பது.

இனி, இத்தகைய நிகழ்ச்சிகள் எமது வாழ்நாளிற் சிலமுறை எம்பால் நேர்ந்தனவேனும், அவற்றுள் இரண்டு இன்னும் எமது

உளத்தை விட்டகலாமல் மிகவுந் தெளிவாகப் பதிந்திருத்தலால், அவையிற்றில் ஒன்றை இங்கே எடுத்துக்காட்டுகின்றேம்.

யாம் எழுதும் நூல் ஒவ்வொன்றும் பன்னாளும் பலமுறையும் ஆய்ந்தாய்ந்து எழுதப்படுவது. யாம் எழுதுவன எமதுளத்திற்கு இனிமை தரும் வரையில், எமதறிவுக்குப் பொருத்தமாகக் காணப்படும்வரையில் அவற்றைப்பன்முறையும் நினைந்துநினைந்து விரையாமல்மெல்லென எழுதுதலே எமக்கு வேரூன்றியஇயற்கையாய்விட்டது. அதனால், யாம் எழுதும் நூல்களை யாமே எமது செலவிற் பதிப்பிட்டு வெளியிடுவதன்றிப், பிறர் அவ்வாறு செய்தற்கு அவற்றைக் கொடுப்பதில்லை. என்றாலும், எம்மை இருகாற் கொழும்புமா நகர்க்கு வருவித்து எமது தமிழ்த் தொண்டிற்கு உதவிபல ஆற்றிய அன்பர் சிலருள் ஒருவரின் அக்கால மனநிலையினை விபர்து, அவர்க்குக் கைம்மாறொன்று செய்ய விழைந்து, யாம் எழுதிய **திருவாசகவிரிவுரையினை** அவர் வெளியிடக் கொடுத்தேம். அவர் அதற்காக எமக்குப் பொருளுதவியுஞ் செய்துவந்தாரெனினும், யாம் திருவாசகச் செய்யுட்களை ஆழ்ந்தாராய்ந் தெழுதிக்கொடுத்து வருகையில், உரையினை விரைந் தெழுதித் தருமாறு இடையிடையே எம்மை அவர் வன்சொற்களால் நெருக்கிவந்தனர். இரவில்ஒன்பதுமணிக்குமேற்கண் விழித்திருந்து ஏதும் எழுதுதல் செய்யாத யாம், அவர்தம் வன்சொற்களைப் பொறுக்கவியலாமல், தொடர்பாகச் சிலநாட் பதினொருமணி வரையிற் கண் விழித்திருந்து அதனை எழுதிவரலாயினேம். அவ்வாறு செய்துவரவே, எமது மூளையிற் சூடேறி மயக்கம் மிகுந்தது; உண்ட சிறிதுணவுஞ் செரியாமற் கக்கலாயிற்று; உடம்பெங்குங் காய்ச்சலும் உண்டாயிற்று; இருப்பில் இருந்தால் தாங்க முடியாத மண்டைக் கிறுகிறுப்பு வந்தது; அதனாற் படுக்கையிலேயே கிடக்கலாயினேம்; இங்ஙனந் துன்புற்றுக்கொண்டுவந்த சில நாட்களிலெல்லாம் எமது கீழ்வயிற்றின் வலப்பக்கத்திலுள்ளே ஒரு குடகு நாரத்தம்பழ அளவினதான ஒரு கழலைக்கட்டி யுண்டாயிற்று. அக்கட்டியுண்டானபின், எமதுடம்பில் விடாக்காய்ச்சல் வீசியது; படுக்கையிற் பிறருதவியின்றி அப்புறம் இப்புறம் புரள்வதும் எழுந்திருப்பதும் இயலாவாயின. வரவர உடம்பும் மெலிந்தது. வந்தநோய் மிகுந்து வருதலன்றிச் சிறிதுந்தணிந்திலா

21 AUG 198[illegible] MADRAS

மையின், எமக்கு அந்நோய் தீர்க்க [illegible] வந்த மருத்துவர்கள் உளங்கலங்கினர்; எமக்கும் உயிர்வாழ்க்கையில் நம்பிக்கையற்றது. என்றாலும் எமது [illegible] உண்டாகவில்லை. அது வருதற்குக் காரணந்தானோ [illegible] அறிதல் இயலவில்லை. இத் தன்மையதான நிலைமையில், எமக்கு இந்நில உலக வாழ்வு இன்று ஒழியுமோ! நாளையொழியுமோ! என்று எதிர்பார்த்திருக்குங் காலத்தில், ஒரு நாள் இரவு விடிவதற்கு இரண்டு மணி நேரத்திற்குமுன்னே எமக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. அது கனவு நிலையோ, நனவு நிலையோ இன்னதென்று துணிந்து சொல்லல் கூடவில்லை. எம்மைச்சூழ ஒரு பேரிருள் தோன்றியது. அவ்விருளில் எவரோ சிலர் உலவும் அரவந் தென்பட்டது. அவ்விருளையும் அதன்கண் உலவுவாரது அரவத்தையுங் கண்டு கேட்க எமதுள்ளம் பெரிது நடுங்கியது. அந்நடுக்கம் உண்டான சிறிது நேரத்திற்கெல்லாம், அப் பேரிருளின்கண் எம்மைச்சூழப் பளபளப்பான ஓர் ஒளி தோன்றியது. உடனே, பார்ப்பதற்கு இனிய முழுமதியொத்த மிக வெண்மையான ஓர் ஆங்கிலத் துரைமகனாரது திருவுருவம் எமதருகே கையில் ஒரு கண்ணாடி விளக்கைப் பிடித்துக்கொண்டு வந்தது. அத்துரைமகனாரது திருவுருவத்தைக் கண்டதும் எமதுள்ளத்தே யிருந்த நடுக்கம் முற்றும் ஒழிந்துபோக, யாம் முன்னறியாத ஒரு மகிழ்ச்சியும் இன்ப உணர்வும் வரப்பெற்றேம். அவரது உருவத்தினுயரஞ் சிறிது குள்ளமாயிருந்தது; அவரது யாக்கை திண்ணியது; தலைமேற் குறுகிய மயிரும் மோவாயில் நீண்ட தாடி மயிரும் நரைத்து வெண்மையாகத் தோன்றின; சிறிதேறக்குறைய எழுபத்தைந்து அல்லது எண்பது ஆண்டிற்கு மேற்பட்டவராகக் காணப்பட்டனர்; மிக வெண்மையான நிறமுடையராய் ஆங்கில மக்களைப் போலவே மேலுங் கீழும் வெள்ளிய சட்டை யணிந்திருந்தனர்; இருந்தவாற்றால், **திருவாசகத்தை** ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த **போப்புத்துரை** யவர்களின் வடிவத்தையே அவர் ஒத்திருந்தனர். இங்ஙனந் தோன்றிய அத் துரைமகனார் தமது கையிற் பிடித்திருந்த கண்ணாடி விளக்குடன் எம்மைச் சுற்றிச்சுற்றி நடந்து, எமக்குச் சிறிது தொலைவிற் சூழத்தோன்றிய அப் பேரிருளில் இயங்கின சிலரைக் கடிந்து பேசினர்; "இவ

210471

ரால் இவ்வுலகிற்கு எவ்வளவோ நன்மை விளையவேண்டி யிருக்கின்றது. ஆதலால், நீங்கள் இவரை அணுகாமல் ஓடிப்போங்கள்!'' என்று தமிழிற்பேசி அவர்களைத் துரத்தினர். அவ்வளவில் யாம் திடுமென விழித்துக் கொண்டேம். விழித்த சிறிது நேரத்திலெல்லாம் பொழுதுவிடிந்தது. எமதுடம்பிற் காய்ச்சலும் இல்லை; அடிவயிற்றின் வலதுபுறத் திருந்த கழலைக் கட்டியையுங் காணேம். அன்று எம்மை வந்து கண்ட மருத்துவரும் பிறரு மெல்லாம் அத்துணைவிரைவில் அக்கொடு நோய் நீங்கியது கண்டு மிக்கதோர் இறும்பூதெய்தினர்.

அவ்விரவில் எம்பால் அங்ஙனம் வந்து நோய்தீர்த்த அப் புனித உருவம், நமது அருமைத் திருவாசகத் தமிழ் மாமறையில் அளவிறந்த அன்புவைத்திருந்த போப்புத்துரை யவர்களின் ஆவி வடிவாயிருக்கலாமோ, அல்லது மேலுலகத்தில் வைகும் அத் துரைமகனாரின் நல்லெண்ணமே அவரதுருவத்தினைத் தோற்றுவித்து எமக்கு வந்த அப்பேரிடரை நீக்கியதோ இன்னதுதான் என்றுரைத்தல் இயலாது. யாம் அப்போது திருவாசக விரிவுரை யெழுதி வந்தமையால், அதற்கு இடையூறு நேரலாகாதென்று நினைந்தே, திருவாசகத்தை யெண்ணி யெண்ணி யுருகிய போப்புத்துரையவர்களே அங்ஙனம் வந்து எமக்கு நோய்தீர்த்தாராதல் வேண்டு மென்பதே எமது முடிபு. வந்த அவ்வாங்கிலத் துரைமகனார் தமக்குரிய ஆங்கில மொழியிற் பேசாது, செந்தமிழிற் பேசி, எம்மைச்சூழ்ந்த இருளில் உலாய தீய ஆவிகளைத் துரத்தியதும் யாங்கொண்ட முடிபினையே வலுப்படுத்துகின்றது. இங்ஙனமே பின்னரொருகாலும் யாங் கடுங்காய்ச்சல் நோயால் துன்புற்றவழிப் பருத்துயர்ந்த கருமேனியும் மழித்த தலையும் அருட் பார்வையும் உடைய ஒரு துறவியின் உருவம் எமது கனவின் கட்டோன்றி எமக்கு அந்நோய் தீர்த்தருளியது

இத்தகைய கனா நிகழ்ச்சிகள் எமது வாழ்நாளில் மிக அரிய வாய்ச் சில முறைகளே தோன்றின. ஏனைக் கனா நிகழ்ச்சிகள் பெரும்பாலும் எமது நினைவுக்கு வருவதில்லை. மேலெடுத்துக் காட்டியவைபோன்ற சிற்சிலவே இப்போதும் எம் மனக்கண்ணெதிரே தோன்று நிற்கின்றன.

இன்னும், பிரானின் ஆகஸ்டிமூலர் எனப் பெயரிய ஒரு மாதரார் தமது நினைவின் ஒருமையால் வேறொரு மாதர்க்குக் கனவின்கட் சென்று நோய்தீர்த்த வரலாற்றினையும் இங்கே எடுத்துக்காட்டுவாம். இம்மாதரார் இருந்தாற் போலிருந்து திடுமென அறிதுயிலிற் செல்லும் இயற்கை வாய்ந்தவர். இவர் அங்ஙனம் அறிதுயிலிற் சென்றிருக்குங் கால் தம்முடம்பிலுள்ள நோய்களையும் பிறருடம்பிலுள்ள நோய்களையுந் தெளிவாய் எடுத்துக்கூறியதோடு அந்நோய் தீர்க்கும் எளிய இயற்கை முறைகளையும் நன்கு விளக்கிச் சொல்வர். அவை மட்டுமே யன்றிப், பிறருள்ளத்தில் உள்ள எண்ணங்களையும் அவர்தம் நடக்கைகளையுங்கூட வெளிப்படச் சொல்லுவர். தொலைவில் வியன்னா நகரத்திலுள்ள தம் உடன்பிறந்தானுக்குத் தமதுருவத்தைத் தாம் தோற்றுவித்தல் கூடுமென்றும் உரைப்பர். தம்முடைய கண்களை இறுகக் கட்டி விட்டாலும் அவர் நாடகசாலைச் சீட்டுகளையும் இசைநூலிலுள்ள பாட்டுகளையுங் கண்ணாற் பார்த்துப் படிப்பதுபோற் படித்துச் சொல்வர். இவர்க்கு நேயரான ஒரு மருத்துவ ஆசிரியர் ஒருகால் இம்மாதரை நோக்கித், தமது குடும்பத்திற் சில நாட்களுக்குமுன் நிகழ்ந்தது யாதென்று வினவ உடனே அவ்வம்மையார் "பதினைந்து கல் தொலைவிலுள்ள ஒரு பட்டினத்தில் உங்கள் மாமனார் இறந்துபட்டார்" என நுவன்றார். அஃதுண்மையாகவே யிருந்தது.

இத்தகைய ஆகஸ்டி மாதரார்க்கு நண்பரான மற்றொரு மங்கையார் தாம் அப்போது பல்வலியாற் பெரிதும் வருந்திக்கொண்டிருத்தலால், அடுத்த நாள் வழக்கம்போல் அவரை வந்து பார்த்தல் இயலாதெனக் கூறினர். "அப்படியாயின் யான் இன்றிரவு, நுங்களைவந்து காண்பேன்" எனப் புகன்றார். அங்கன்றபடியே, தம் நண்பரான மங்கையார் பல்வலியால் துன்புற்றுப் படுத்திருக்கும் அவ்வறைக்குள் அம்மாதரின் உருவம் இராப்பொழுதிற்குரிய உடையணிந்தவண்ணமாய்த் தோன்றி, அம்மங்கையாருடன் பக்கத்திற் படுத்துக்கிடந்தது. காலையிற் கண்விழித்த அம் மங்கையார் தமக்கிருந்த பல்வலி முற்றுமே நீங்கிப்போகக்கண்டு பெரிதும் வியப்படைந்தார். ஆகஸ்டி அம்மையார் தமது இல்லத்தின்கண் தமது படுக்கையைவிட்டு அகலாதிருந்தும், அவர் எங்

னனந் தூது இல்லத்திற் புகுந்து தம்முடன் படித்திருந்தார்? என்பதை நினைந்து அம்மங்கையார் அடைந்த வியப்பினுக்கு ஓர் அளவேயில்லை.

இனி, நனவுணர்வினால் எவ்வாற்றானும் அறிந்துகொள்ளல் இயலாத கல்விப்பொருள்கள் சில கனவின்கண் இனிதுவிளங்கித் தோன்றிய வரலாறுகளும் பல; அவற்றுட் சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுதும் :—

பாபிலோனிய தேயத்தில் நிப்பூர் என்னும் நகரத்தின்கட் பல்லாயிர ஆண்டுகட்கு முன் அழிந்துபட்ட அரண்மனைகளிலே பண்டைநாள் அரசர்களாற் செதுக்கி வைக்கப்பட்ட கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து, அவற்றிற் சொல்லப்பட்ட குறிப்புகளைக் கொண்டு, அஞ்ஞான்றை அரசர்கள் அவர்கீழ் உயிர்வாழ்ந்த மக்களுடைய நாகரிக வரலாறுகளை யெல்லாம் ஆராய்ந்தெழுதுதற் பொருட்டு, அந்நகர்க்குச் சென்ற ஜெர்மன் ஆசிரியரான ஹில்பிரச் (Professor Hilprecht) என்பார் ஆண்டெடுத்த இரண்டு சிறு மோதிரத் துண்டுகளிற் செதுக்கப்பட்டிருந்த சொற்றொடர்களைக் கண்டறிதற்கு எவ்வளவோ முயன்றும், அம்முயற்சி அவர்க்குச் சிறிதும் பயன் தந்திலது. ஏனென்றால், கண்டெடுத்த அச் சிறுதுண்டுகள் இரண்டும் ஒரே மோதிரத்தின் துண்டுகளாகக் காணப்படவில்லை. ஆகையால், அவற்றை எவ்வளவுதான் இணைத்துப் பார்த்தாலும், அவற்றின்கட் செதுக்கப்பட்ட சொற்கள் இணைந்து ஒரு பொருள் தந்தில. நிப்பூரிலிருந்த பகலவன் கோயில் அழிந்து கிடக்கும் இடத்தை அகழ்ந்து தேடியதில், அவ்விரண்டு சிறு மோதிரத் துண்டுகளை யொத்தவை பின்னும் பன்னிரண்டு கிடைத்தன. அவற்றின் மேலெல்லாஞ் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் ஆப்புவடிவம் வாய்ந்திருந்தன. அவை செதுக்கப்பட்ட காலம், இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னே தவங்கி 3600-ஆண்டுகள் வரையிலாகும். இத்துண்டுகளை யெல்லாம் பன்னாளும் பன்முறையும் அவர் இணைத்து இணைத்துப் பார்த்தும், அவற்றின் பொருளைக் கண்டறிதற்கு எவ்வளவோ பாடுபட்டும், அது சிறிதுங் கைகூடவில்லை. பின்னர் ஒருநாள் நள்ளிரவு மட்டும் அவர் இவ்வுழைப்பிற் கருத்தை ஓயாமற் செலுத்திப்பார்த்தும் பயன் ஏதும் உண்டாகாமையால் மிகவும்

அயர்வடைந்தவராய்ப் படுக்கையிற்சென்று ஆழ்ந்து துயில்கொள்ளலானார். அங்ஙனம் அவர் ஆழ்ந்து துயில்கையில், அந்த நிப்பூர்ப் பகலவன் கோட்டத்திற் பண்டைக்காலத்திற் குருக்களாயிருந்த ஒருவரின் உருவம் அவரது அகக்கண்ணெதிரே தோன்றியது. அவ்வுருவம் நீண்டு ஒல்லியாய், நாற்பதாண்டு அகவையினதாய்ப், பொதுவான உடையணிந்திருந்தது. இவ்வாறு தோன்றிய அவ்வுருவம், அக்கோயிலின் தென்கிழக்கில் உள்ளதாகிய களஞ்சிய அறைக்கு அவ்வாசிரியரை அழைத்துச் செல்வதாகக் காணப்பட்டது. அங்கே சென்றதுந், தாழ்ந்த மச்சுடையதாய்ச் சாளரம் ஏதும் இல்லாததாய்ச் சிறியதாய் அதனுள்ளிருந்த மற்றோரறைக்குள் அவ்வாசிரியரை அது கூட்டிச்சென்றது; அச் சிற்றறைக்குள் ஒரு பெரிய மரப்பெட்டியிருந்தது; நிலத்திலே ஒருவகை மணிக்கல் (agate) லின் துண்டுகளும் வைடூரியங்களும் இறைந்து கிடந்தன. அவ்வறைக்குட் சென்றதும் அவ்வுருவம் அவ்வாசிரியரை நோக்கி, "22, 26-ஆம் பக்கங்களில் நீர் தனித் தனியே வெளிப்படுத்தியிருக்கின்ற இரண்டு துண்டுகளும் விரலில் அணியும் மோதிரங்கள் அல்ல, அவற்றின் வரலாறு இது :- கி.மு. 1300-இல் இருந்த அரசன் குறிகழுவென்பான், ஒருகாற் பகலவன் கோயிலுக்குத் தான் சேர்ப்பித்த ஏனை மணிக்கற்கள் வைடூரியங்களுடன், எழுத்துவெட்டிய ஒரு மணிக் கற்குழாயினையும் நேர்த்திக்கடனைச் செலுத்தியிருந்தான். அதன்பிற் சடுதியிலே, நினிப்பு என்னுங் கடவுளின் றிருவுருவத்திற்காக மணிக்கல்லிற் சமைத்த ஒரு சோடு காதணிகள் செய்யும்படி அரசனிடமிருந்து குருக்களாகிய எங்களுக்கு ஒரு கட்டளை வந்தது. அந்நேரத்தில் எங்கள் கையில் மணிக்கல் ஏதும் இல்லாமையால் யாங்கள் பெருந்திகில் கொண்டோம். அரசனிட்ட கட்டளைப்படி செய்தற்கு, அவன் செலுத்திவைத்த அம்மணிக் கற்குழாயை மூன்று கூறாக அறுத்து, மூன்று வளையங்கள் செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. அக்குழாயின்மேற் செதுக்கப்பட்டிருந்த எழுத்துத்தொடர் அதனால் மூன்று கூறாக அறுந்து ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு வளையத்தின்கண் இருப்பதாயிற்று. முதலிரண்டு வளையங்களும் அக்கடவுளின் திருவுருவத்திற்குக் காதணிகளாயின; நுமக்கு அத்தனை வருத்தத்தை

விளைவித்த அத்துண்டுகளிரண்டும் அக்காதணிகளின் பகுதிகளாகும். அவ்விரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்ப்பீரானால் என் சொல்லினுறுதி புலனாகும். ஆனால், மூன்றாம் வளையத்தை நீர் இதுகாறும் அகழ்ந்து பார்த்துங் கண்டெடுக்கவில்லை; அஃது ஒருகாலும் நமக்கு அகப்படாது." என்று கூறிய அளவில் மறைந்துபோயது. உடனே அவ்வாசிரியர் விழித்தெழுந்து தாங் கண்ட அக்கனவினைத் தம் மனைவியார்க்கு எடுத்துரைத்தார். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அவ்விரண்டு துண்டுகளையுந், தமக்குக் கனவிற்றோன்றிய குருக்கள் உருவம் மொழிந்த வண்ணமே ஒன்றுசேர்த்துப் பார்க்க, அவை பெரிதும் வியக்கத்தக்கவகையாய் ஒருங்கு பொருந்திப் "பகலவன் புதல்வரான நினிப்புக்கடவுளாகிய தன்பெருமானுக்குப், பகலவனின் பெருங்குருக்களான குறிகழுவென்பான் காணிக்கையாக அளித்தது இது" வெனப் பொருள் பயந்தது.

பார்மின்கள்! இற்றைக்கு ௩௨00-ஆண்டுகளுக்கு முன் அழிந்துபட்ட நிப்பூர்ப் பகலவன் கோட்டத்திலிருந்து அகழ்ந்தெடுத்த வளையத் துண்டுகளிற் செதுக்கப்பட்ட சொற்றொடர், நனவின்கண் எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தும் ஒரு சிறிதும் புலப்படாதுபோக, மற்று அது கனவின்கட்டோன்றி அறிவித்த குருக்களின் வாய்மொழியால் நன்கு புலனாயிற்று. மிக அரிய இவ்வுண்மை நிகழ்ச்சியினை நுணுகி ஆராய்ந்த ஐரோப்பிய ஆசிரியர்கள், அத்துண்டுகளை அகழ்ந்தெடுத்த ஹில்பிரச் சென்பார் நாளும் நனவின்கண் ஆராய்ந்துகொண்டு இடர்ப்பட்டவராதலாலும், அக்கோயிற் சிற்றறையின் வரலாற்றினை மற்றோராசிரியர்பாற் கேட்டிருந்து அதனை மறந்துபோயினும் அவரது அவ்வாராய்ச்சி யறிவு கனவுடன்பின்கட் டெளிவு மிக வுடையதாய் அதனை நினைவுகூர்ந்து இயங்கினமையாலும், அவரது நுண்ணறிவே கனவின்கண் அச்சொற்றொடரை இணைக்கும் வழிகாட்டி, அதற்கு அக்கோயிற் குருவினுருவத்தையுந் தோற்றுவித்ததெனக் கூறுநிற்கின்றனர். அவர் கூறும் அவ்விளக்கம் எவ்வளவில் ஏற்றுக்கொளற்பாலதென்பது அறிஞர்களே முடிவுகட்டற்பாலார். மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் அப்பகலவன் கோட்டத்திலிருந்த ஒரு குருக்களின் உருவத்தையும், அவ்வுரு

வம் எடுத்துரைத்த உண்மைகளையும் எல்லாம், நனவின்கண் இடர்ப்பட்ட ஹில்பிரச் ஆசிரியரது நுண்ணுணர்வே கனவின்கட் கற்பித்துவிட்டன என்னும் உரை எமதுளத்திற்குப்பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை. எமதறிவுக்குப்பட்டமட்டிற், பண்டிருந்த அக்குருக்களின் உருவமும் அது மொழிந்த உண்மைகளும் அவ்வாசிரியரது நினைவே கற்பித்தன ஆகா. உயர்ந்தோர் செய்யும் அரிய அறிவுமுயற்சிகள் பயன்படாவாய்ப்போக, அவர் பாடும் பாட்டினைத், தொலைவில் நுண்ணுடம்பிலிருந்து அறியும் ஆன்றோரின் ஆவியோ, அல்லது அவரது நினைவோ, அங்ஙனம் இடர்ப்பட்டு வருந்தும் அறிஞர்க்குக் கனவின்கட் டோன்றி உண்மையை அறிவித்து அவர் தம் இடர்ப்பாட்டினை நீக்கிச் செல்லாநிற்கின்றதென்பதே எமக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. அது நிற்க.

இன்னுஞ், சமயப்பொருள் விரிவுரை செய்வதில் மிகச் சிறந்தவரான சமயகுரு ஒருவர் (Spurgeon) ஒருகால், ஒரு சிறப்பு நாளிற் செய்யவேண்டிய விரிவுரையொன்றனை எழுதுவதற்காகத் தமது கருத்தினை ஒருமுகப்படுத்தி அமர்ந்து, அதனைச் செய்யப்புகுந்தார். ஆனால், அன்றைக்கு அவரால் அஃது அழகிதாக எழுதிமுடிக்கப்படுதற்கு இடந்தாராமற் பேரிடர் பயப்பதாயிற்று. எவ்வளவோ முயன்றும், அஃது ஓர் உருப்படாமையால் மனத்தளர்ச்சி யுடையவராய் அது செய்வதை விட்டெழுந்தார். என்றாலும், அவ்விரிவுரை யடுத்தநாளிற் செய்யப்படவேண்டுவதாதலால், அது பற்றி அவர் பெரிதும் மனங்கவன்று அயர்ச்சியாற் படுக்கையிற்கிடந்து உறங்கினார். அங்ஙனம் உறங்குகையில் அவர் நள்ளிரவிற் றிடுமென எழுந்து நின்று அவ்விரிவுரையினை மிக்க கிளர்ச்சியுடனும் உருக்கத்துடனும் ஒரு தொடர்பாக ஒழுங்காகப் பேசுவாரானார். அவர் அங்ஙனம் விரிவுரை நிகழ்த்தும் அரவங் கேட்டுத் துயிலொழிந்த அவர்தம் மனைவியார் அதனை அருகிருந்து கேட்டுப் பெருவியப்படைந்தார். அவ்வாறு அவர் விரிவுரை நிகழ்த்தியபின் திரும்பவும் படுக்கையில் அமர்ந்து உறங்கிவிட்டார். மறுநாட் காலையில், அவர்தம் மனைவியார் அவர்க்கு அந்நள்ளிரவு நிகழ்ச்சியினைத் தெரிவித்த

பிறகுதான், அவர் அவ்விரிவுரை தமது கனவின்கண் ஓர் உருவாகி ஒழுங்குபட்டதை நினைவுகூர்ந்தார்.

மேற்போந்த உண்மை நிகழ்ச்சிகளாகிய மெய்ச்சான்றுகள் கொண்டு, கல்வியாராய்ச்சியிற் கருத்தூன்றி நிற்பார்க்கு அவர் தம் ஆராய்ச்சித் துறையில் நேரும் இடர்ப்பாடுகளை, நுண்ணுடம்பிற் சென்ற அவரது நுண்ணுணர்வோ, அன்றி மேலுலகங்களில் உறைவாரான கலைவல்லாரின் ஆவிகளோ, அன்றி அவருடைய நினைவுகளோ அவர்தங் கனவிற்றோன்றி நீக்கி, அவர் தமக்கு மெய்யறிவுச்சுடர் கொளுவும் உண்மையினைத் தெற்றெனத் தெரிந்துகொள்க.

இனிப், பின் நிகழப்போகும் இடர்கள் கனவின்கண் முன் அறிவிக்கப்படுதலும் ஆங்காங்கு நடைபெறா நிற்கின்றது. இதற்கு மெய்யாக நிகழ்ந்த சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுதும் :—

1890-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 12-ஆம் நாள், ஒருதுரைமகனார் (William Tudor) தமக்கு வேண்டிய நிலங்களை வாங்குதற்கென்று, தாம் இருந்த ஊரைவிட்டு வெளியூர் ஒன்றிற் சென்றிருந்தவர், அன்றிரவு படுக்கைக்குச் சென்றார். சென்றார் நன்றாக அயர்ந்துறங்கினவர், நள்ளிரவில் தம்மனைவியார் தமது பெயரைச் சொல்லி அழைக்கக்கேட்டு விழித்தெழுந்து படுக்கைமேல் உட்கார்ந்தார். உட்கார்ந்து தாம் ஓர் ஊரிலுந் தம்மனைவியார் மற்றோர் ஊரிலும் இருத்தலை நினைவுகூர்ந்து, திரும்பவும் விழுந்து படுத்துக் கொண்டார். என்றாலும், மறுநாட் காலையில எழுந்தது முதல், அவர் முன்னாள் இரவில் தம்மனைவியார் தம்மைப் பெயர்சொல்லி அழைத்த ஒலியினை நினைந்து நினைந்து பெரிதும் மனங்கலங்குவாரானார். நாடோறுந் தம்மனைவியாரிடமிருந்து கடிதம் வரும் வழக்கம்போற் சிலநாட்களாகக் கடிதம் வாராமையினையும் நினைக்கவே அவர்க்கு அக்கலக்கம் பின்னும் மிகுவதாயிற்று. ஆகவே, அவர் தம்மனைவியார்க்கு உடனே ஒரு கம்பிச்செய்தி விடுத்தார். அதற்கு யாதொரு விடையும் வாராமையால், மறுபடியும் ஒரு கம்பிச்செய்தி விடுத்தார். அதற்கும் விடை வந்திலாமையால், தம் மனைவிக்குத்தான் உடம்பு நலமில்லையோ, அல்லது தம் பிள்ளைகளுள் எவரேனுந்தாம் நோய்ப்பட்டனரோ, அல்லது தம் நெருங்கிய உறவினரெவர்க்கேனுந்தாந் தீங்கு நேர்ந்ததோ, அல்லது அவரில் எவரேனுந்தாம் இறந்து பட்டனரோ என்று பலவாறாயெல்லாம் எண்ணியெண்ணி அவர் துன்புறலானார். பிறகு இரண்டொரு நாளில் அவர்தம் மனைவியாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வந்த அக்கடிதம், அத்துரைமகனாரின் மருமகன் ஜூலை, 11-ஆம் நாள் நள்ளிரவில் ஒரு மின்வண்டியின் எதிரே விழுந்து படுகாயம் அடைந்தனனென்றும், ஒற்றைக்கால் போய் விட்டதேனும் அவன் உயிர்பிழைத்துக்கொண்டானென்றும் அறிவிப்பதாயிற்று. அவர்தம் மனைவியார் அத் துயரநிகழ்ச்சியைப் பின்னாட் பிற்பகல் அறிந்து, அன்றிரவெல்லாம் பெருந்துயர்கூர்ந்து தம் கணவரையும் நினைந்திருந்தாராதலால், அவரது அந்நினைவே தொலைவில் வேறோர் ஊரிலிருந்த அவர்தங் கணவரை அதே நாள் இரவில் அழைப்பதாயிற்று என்க.

இன்னுங், கொலம்பா என்னும் முனிவர் ஒருநாளிரவு தம் திருக்கூட்டத்துடன் துயில்கொண்டிருப்புழிச், சடுதியில் துயில் ஒழிந்து தம் திருக்கூட்டத்தவரை யெழுப்பித், தறியிற் கட்டியிருக்கும் படகையவிழ்த்துத் தாம் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் அதனைக் கொணர்ந்து நிறுத்துகவென அவர்க்கு மொழிந்தார். ஏனென்றால், அவர்கள் அப்படகை முன்னே நிறுத்தியிருந்த கரைப்பக்கத்திலுள்ள சிற்றூர் நெருப்புக்கு இரையாகப் போதலை அவர் எங்ஙனமாகவோ முன்னரே தெரிந்துகொண்டார். அவர் கட்டளையிட்ட வண்ணமே அப்படகு அவர்கட்கு அண்மையிற்கொணர்ந்து நிறுத்தப்பட்ட சிறிது நேரத்திலெல்லாம், அவர் கூறிய அச்சிற்றூர் நெருப்புப்பற்றி யெரிதலை அவர்கள் எல்லாருங் கண்டு வியப்புற்றனர்.

கனவிற்றோன்றும் முன்னறிவிப்புகள்.

இன்னும், இவ்விந்திய நாட்டின் அரசியர்படைக்குத் தலைவராயிருந்த ராபர்ட்ஸ் என்பார் ஒருகாற் காபூல்நகரை விட்டுக் கைபர் கணவாய்வரையில் மிகுவிரைவாய்க் குதிரையூர்ந்து வருகையில், திடுமென அவருள்ளத்தில் ஓர் உணர்வுதோன்றிப் பின் வரும் பேரிடரை அறிவித்து, அவர் அதற்குமேற் செல்லாமல் அவரைத் தடைசெய்தது. அவர் அதனால் அங்ஙனந் தடைப்பட்டு நின்ற சிறிது நேரத்திலெல்லாந், தமக்குக்கீழ்த் தலைவராயுள்ளார் இருவர் அவர்பாற் கடுகப்போந்து, காந்தாரத்திலுள்ள

சம்மவர் படையானது பகைவர் தலைவனால் முறியடிக்கப்பட்டு முற்றுகை செய்யப்பட்டிருக்கும் மிக வியப்பான செய்தியைத் தெரிவித்தார். அது கேட்டதும், அவர் காந்தாரத்திற்குத் திரும்பிச்சென்று, சமது படைக்கு வந்த அப்பேரிடரை நீக்கிப் பெருஞ் சிறப்புப் பெற்றார்.

இங்ஙனமே, போர் துவங்கும்போதும் போர்மேற் செல்லும் போதுமெல்லாம் ராபர்ட்ஸ் படைத்தலைவர்க்கு இத்தகைய முன்னறிவிப்புகள் அடுத்தடுத்து வருதலுண்டு. அவ்வறிவிப்புகளின்படி தாம் மேற்கொண்ட போர்வினைகளை நடாத்தியே அவர் வெற்றி பெற்று வந்தார். 1914-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஜர்மன் அரசுக்கும் ஆங்கில அரசுக்கும் போர் மூண்ட போது, இப்படைத்தலைவர் கூறிய அறிவுரைகளைக் கேளாமையினாலேயே, ஆங்கிலர் பெருந் துன்புழந்தனர். இவர்தம் அறிவுமொழிகளைமட்டும் அவர்கள் கேட்டு நடந்திருந்தால் அத்தகைய பெருந்துன்பத்திற்கு ஆளாகி இரார்கள். இன்னோரன்ன முன்னறிவிப்புகள் விக்டோரியா பேர் அரசியார்க்கும் அடுத்தடுத்து வருதலுண்டு. அங்ஙனம் அவை வருங்காலங்களிலெல்லாம், அவர், தம் அமைச்சர் பின் வருவன அறியாமையாற் புகல்பவைகளையெல்லாம் ஒரு சிறிதும் ஏலாமல் ஒழித்துத், தாம் பெற்ற அவ்வறிவிப்புகளின்படியே நடந்து தம்கீழ் வாழ்வார்க்கு வரற்பாலனவாயிருந்த பேரிடர்களை யெல்லாம் வாராமற் றடைசெய்து, அவர்களைக் காத்து வந்தனர்.

இன்னும், உடல்வலிமையில் தமக்கு நிகரில்லாதவரென்று உலகம் எங்கணும் பெரும்புகழ் ஓங்கப்பெற்ற சாண்டோ (Sandow) என்பவர் தாம் இயற்றிய "வலிவுபெறுதல் யாங்ஙனம்?" என்னும் அரிய நூலின்கட் பின்வருமாறு வரைந்திருக்கும் பெரிய உண்மை மனத்தின்கட் பதிக்கற்பாலதாகும்:—

"யாங்கள் ஏறிச்சென்ற கப்பல் (Elbe) விரைவில் அமிழ்ந்தியழியப்போவது என்னும் உணர்ச்சி எப்படியோ என்னுளத்தில் அடுத்தடுத்துத் தோன்றலாயிற்று. பொதுவாக யான் இத்தகைய அறிவில் நம்பிக்கை கொள்வதில்லை; ஆனாலும், இவ்வுணர்ச்சி என் தோன்றுகின்றதென்பதும் அறியக்கூடவில்லை. இவ்வெண்ணத்தைத் தொலைக்க யான் எவ்வளவோ முயன்றும் அஃது

என்னைவிட்டுச் சிறிதும் நீங்கியபாடில்லை. என்றோ ஒருநாள் இம்மரக்கலம் அமிழ்ந்திவிடப் போகின்றதென்னும் உணர்ச்சி வரவர உரம்பெற்றது. அம்மரக்கலத்துப் பொறியை இயக்கும் துரைமகனோடு யான் நேயங்கொண்டமையால், அவர் அமர்ந்திருக்கும் அவ்வேலையை விடுத்து இனிக் கடல்மேற் செல்லாதிருக்கும்படி அவர்க்கு அறிவுரை மொழிந்தேன். அவரும் என்சொற் கேட்டு அவ்வேலையை உடனே விட்டு நீங்கினமையால் உயிர் பிழைத்தார். ஏனென்றால், எனக்கு அம்முன்னுணர்வு தோன்றிய சிறிது காலத்திலெல்லாம் அக்கப்பல் கடலுள் அமிழ்ந்திப்போயிற்று.

இங்ஙனமே, ஒருமாது இருப்புச்சுரங்கத்தில் வேலைசெய்து வந்த தன் கணவனை ஒருநாள் வேலைக்குச் செல்லாதபடி தடைசெய்தாள். எதனாலெனின், அன்றைக்கு அவ்விருப்புச்சுரங்கத்தின் மேற்கூரையின் ஒரு கூறு இடிந்துவிழுமென்பது அம்மாதின் உள்ளத்திற்பட்டது. மற்று, அவள் கணவனோ அவள் சொற் கேளாமல் வழக்கம்போல் அன்றைக்குத் தன் அலுவல்மேற் சென்றான். ஐயகோ! அன்றைக்கு அவன் மனைவி சொல்லியபடியே, அச்சுரங்கத்தின் ஒரு மேற்பகுதி இடிந்துவிழ, அதன் கீழ் வேலைசெய்துகொண்டிருந்த அவன் அதன்கீழ் அகப்பட்டு உடல்நசுங்கி இறந்துபோனான்!

இன்னும், மேல்நாட்டிற் பெரும்போர் நடந்த காலத்திற் காயம்பட்ட மறவர்க்குப் பேருதவி செய்தவரும், விரிவுரை நிகழ்த்துவதிற் பெரும்புகழ் படைத்தவருமான ஓர் ஐரோப்பிய மாதரார் ஒருகாற் புகைவண்டியிற் போய்க்கொண்டிருக்கையிற் சடுதியில் ஓர் ஒலி தோன்றி, அவர் தாம் அவ்வண்டியில் அமர்ந்திருந்த அப்பக்கத்தைவிட்டுக் குதித்து வேறுபக்கத்தில் விரைந்து சென்று அமருமாறு கற்பித்தது. அவ்வொலி எங்கிருந்து வந்ததென்பதை அவர் அறியக்கூடவில்லை. எனினும், அம்மாதரார் அவ்வொலி கட்டளையிட்டபடியே விரைந்து குதித்து அவ்வண்டியின் மற்றொரு பக்கத்திற்போய் ஏறியமர்ந்தார். அவர் அங்ஙனம் அமர்ந்த இரண்டொரு நொடியில் எல்லாம், அவர் முன் ஏறி

யிருந்த அவ்வண்டியின் பக்கம் நொறுங்கி அழிந்தது. மற்று, அம்மாதரோ அத் தெய்வவொலி கற்பித்தவண்ணம் உடனே நடந்தமையால், உயிர் தப்பி நெடுநாள் நன்கு உயிர்வாழ்ந்தா ரென்பது.

இன்னும், ஒன்பதாண்டுள்ள ஒரு சிறுமி தன் சிறிய தங்கை யுடன் மாலை வேளையிற் பழைய ஓர் அரண்மனையினுள்ளே உலா வித் திரிந்துகொண்டிருந்தனள். மாலை வெளிச்சம் வரவர மங்கிக் கொண்டு வருகையில் நீருஞ்சேறும் நிறைந்த ஒரு படுகுழியோர மாய் அவ்விருவரும் வந்து விட்டனர். இருண்ட நேரமாய் இருந்தமையால், அப்படுகுழி அங்கிருப்பதை அவர்கள் அறிய வில்லை; இன்னும் ஒரு நொடிப்பொழுது அவர்கள் நடந்திருந் தால் அப்பள்ளத்தின்கண் வீழ்ந்து அமிழ்ந்திப்போயிருப்பர். ஆனால், நான்கு திங்கட்குமுற் காலஞ்சென்ற அவர்கள் அன்னை யின் குரலொலியானது தோன்றி, அவ்விருவரையும் பெயர் சொல்லியழைத்து, அவர்கள் அப்பள்ளத்தண்டை செல்லாமல் தடைசெய்தது. அவ்வாறு தோன்றிய தம் தாயின் குரலொலி யைக் கேட்டு. அவ்விருவரும் அப்பள்ளத்தின் அருகே செல்லா மல் விலகிச் சென்றமையால் உயிர்பிழைத்தனரென்பது.

இன்னும், படைத்தலைவராயுள்ள ஒரு துரைமகனும், அவ ரோடு உடனிருந்து வேலைபார்க்கும் மற்றொருவருந், தாம் இருந்து எழுதும் ஒரு மேசையின் இருபக்கத்துமிருந்து பொருட் குறிப்புச் செய்துகொண்டிருக்கையில், வெளியே தாழ்வாரத் தின்கண் எவரோ நடக்கும் அரவந் தென்பட்டது. அப்போது அவ்விருவரும், இறந்துபோன தம் மற்றொரு நண்பரை நினைந்து "அவர் காலமாகியிராவிட்டால், அவரே இப்போது உள் வந்தா ரென்று நாம் சொல்லல் வேண்டியிருக்கும்." என்று தமக்குட் பேசுகையில், இறந்துபோன அவர்தம் நண்பர் உண்மையாகவே உள்ளே வந்தார்; வந்து "நான் சொல்லவேண்டுவதுஞ் செய்ய வேண்டுவதும் ஒன்றிருத்தலால், நான் சொல்வதை நீங்கள் எழு திக்கொள்வீர்களா? யான் இங்கிலாந்து தேயத்தைவிட்டுப் புறப் படும்முன், யான் ஒரு கோயிலிற்சென்று என் மனைவியை மறை வாகவே மணந்துகொண்டேன்." என்று சொல்லித் தான் மணந்துகொண்ட அம்மாதின் பெயரையும் மணந்த நாளையுஞ்

அறிவு குன்றிப்போகாமல், அவர்கள் மேன்மேல் அறிவு மிகப் பெற்று, அதனால் அரியபெரிய முயற்சிகள் செய்து அவற்றோடு போராடி வெற்றிகொண்டு நிற்கும் பேராண்மை, மேலே யிருந்து இவ்விரு வேறு அமைப்புகளையும் நோக்குதலால் நங் கட்புலனெதிரே நன்கு விளங்காநிற்கின்றது. அங்கும் இங்கு மாய் அலையுங் கடலின் எதிரே, உயர்நிலைமாடங்களுந் தொழில் நிலையங்களும் அலைவின்றி வீற்றிருக்குங் காட்சி அறிவுடை மக் களின் அசைவாவுள்ளப்பான்மையினை அறிவிக்கின்றதன்றோ?

இனிக், கடலின் பரப்பு, இந்நிலத்தின் பரப்பைவிட மும்மடங்கு பெரியதாயிருக்கின்றது. ஆனதனாற்றான் தமிழ் மக்கள் அதனைப் 'பரவை' என்று வழங்கிவருகின்றனர். நிலத் தைவிட நீரின் அளவு இத்துணை மிகுதியாய் இருக்கவேண்டு வது என் என்று ஆராய்ந்து பார்த்தால், நிலம் வன்பொருளா யும் நீர் மென்பொருளாயும் இருத்தலினாலும், நிலத்தின்கட் பயிராகும் பயிர் பச்சைகள் முதற் சிற்றுயிர்கள் பறவைகள் விலங்குகள் மக்கள் ஈறான எண்ணிறந்தகோடி யுயிர்களின் உயிர்வாழ்க்கைக்குங் கடலின்கண் உயிர்வாழும் அளவிறந்த கோடி உயிர்களின் உயிர்வாழ்க்கைக்குமெல்லாம் நீரின் உதவி யே இன்றியமையாததாய் இருத்தலினாலும், நிலமானது தன் னளவில் மாறாமல் நிற்க நீரானது நிலத்திலுஞ் சுவறுவதொடு மீண்டும் மழையாய் இறங்குதற்கு ஆவியாகமாறி வானின்கண் முகிலாய் உலவவேண்டியிருத்தலினாலும், நிலத்தைவளமுடை யதாக்கி உயிர்களைப் பல்கச்செய்யும் நீர், நிலத்தினும் மிகுந்த அளவினதாக இறைவனால் அமைத்துவைக்கப்பட்டதென்று உணர்தல் வேண்டும்.

இனிக், கடலைவிட ஆழத்தின் மிக்கதொரு நீர்நிலை எங் கும் இல்லாமையால், 'ஆழி' என்னும் பெயர் கடலுக்குரிய தொன்றாகப் பண்டுதொட்டுத் தமிழில் வழங்கிவருகின்றது. நமது இவ்விந்திய நாட்டை யடுத்திருக்கும் "இந்தியமாக்கடல்" பெரும்பான்மையான இடங்களிற் பன்னீராயிர அடி அல்லது சிறி தேறக்குறைய இரண்டேகால் மைல் ஆழமுடையதாக இருக்கின்றது; மற்றுச் சிற்சில இடங்களிலோ அஃது இரண்டே கால்மைலுக்குமேல் நாலேகால்மைல் வரையில் ஆழமுடைய

தாக ஆராய்ந்தறியப்பட்டிருக்கின்றது. சாவகத் தீவுக்குத் (Java) தென்னண்டையிலுள்ள கடற்பகுதியோ நாலேகால் மைல் ஆழமுடையதொன்றாக ஆராய்ச்சி வல்ல ஆசிரியரால் அளந்து காணப்பட்டிருக்கின்றது. இனி, இவ்விந்தியமாக்கடலினும் ஆழமுடையது "அட்லாந்திக்" மாக்கடலேயாம்; தென் அமெரிக்காவுக்கும் வட அமெரிக்காவுக்கும் இடையிலேயுள்ள மேல் இந்தியத் தீவுகளின் வடக்கே நிற்கும் இம்மாக்கடற்பகுதியின் ஆழம் சிறிதேறக்குறைய நாலேகால்மைல் ஆகும். இனி, இப்பெருங்கடலினும் ஆழம் வாய்ந்தது "அமைவுப் பெருங்கடலே" யாகும். இஃது அமெரிக்காப்பெருந்தேயத்திற்கும், ஆசியா ஆத்திரேலியாப் பெருந்தேயங்கட்கும் இடையிலே நிற்கின்றது. இது சிற்சில இடங்களில் ஐந்துமைல் ஆறுமைல் ஆழமும் வாய்ந்ததொன்றாக அளந்தறியப்பட்டுள்ளது. இன்னும் இஃது எவ்வளவு மிகுதியான ஆழமுடையதென்பதனை முற்றும் அளந்து காண்டல் இயலாததாய் இருக்கின்றதென ஆராய்ச்சி வல்ல ஆசிரியர் நுவல்கின்றனர். எனவே, இந்நிலவுலகத்தைச் சூழ்ந்த பேராழியின் ஆழம் ஆறுமைல் வரையிற் செல்வதென்பது நன்கறியப்பட்டிருத்தலால், அக்காரணம் பற்றி அதனை 'ஆழி' யென வழங்குவது பெரிதும் பொருத்தமுடைத்தாதல் காண்க.

இனிக், கடலின்கண் உள்ள நீர் உப்பாயிருத்தல் என்னென்றறிய அறிஞர் சிலர்க்கு அவா எழும். கடலுக்கு மிக அருகாமையில் உள்ள சில கிணறுகளில் தீஞ்சுவைத் தண்ணீர் கிடைப்பதாயிருக்க, அவற்றை யடுத்திருக்குங் கடலில்மட்டும் உப்பு மிகுந்திருத்தல் வியக்கத்தக்கதன்றோ? இவ் வேறுபாட்டிற்குக் காரணம் என்னையென்று ஆராய்ந்து பார்த்தாற், கடலின்நீர் மேல்நீராயிருப்பதும், அதனை யடுத்துள்ள நல்ல கிணற்றுநீர் கீழ்நீரா யிருப்பதுமேயா மென்பது புலனாகும். நிலத்தின் பல பகுதிகளிலும் மலைகண்மேலும் பெய்த மழை நீர் ஆங்காங்குள்ள பலவகை உப்புகளையுங் கரைத்தெடுத்து ஆறுகளின் வழியே கொணர்ந்து கடலின்கட் சேர்த்துவிடுகின்றது; விடவே, கடன்மேல் நிற்கும் நீர் உப்புடையதாகின்றது. மற்றுக், கடலடுத்த கிணற்று நீரோ கிணற்றின் அடிப்படையி

லிருந்து மேலே சுரப்பது; அவ்வடிப்படையிலுள்ள நிலம் உப்பில்லாததாயின் அதன்கட் சுவறிய மழைநீருந் தூயதாய் இன்சுவை மிகுந்து பருகுதற்குப் பயன்படுவதாய் நிற்கும். அவ்விருவகை நீரும் வேறுபடுதற்குக் காரணம் இவையேயாதல் கண்டுகொள்க. கடல் நீரில் எழுவகையுப்புகள் கரைந்து கலந்திருக்கின்றனவென்று அறிஞர்கள் பகுத்துணர்ந்திருக்கின்றார்கள். இங்ஙனமாகக் கடல் உப்புநீர் உடையதாதல் பற்றியே, அஃது 'அளக்கர்,' 'உவரி' முதலிய பெயர்களால் வழக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறெல்லாந் தமிழ் மக்கள் பண்டுதொட்டுக் கடலுக்குவழங்கிவரும் பலபெயர்களைக்கொண்டு, அவர்கள் இவ் வையஞ்சூழ்ந்த கடலின் இயற்கைத் தன்மைகள் பலவும் நன்கு ஆராய்ந்துணர்ந்தவர்களாதல் தெளிந்துகொள்ளப்படுமென்க.

கல்வியும் ஓய்வும்

"கல்வி கற்பவர்களுக்கு இடையிடையே ஆறியிருத்தலும் ஓய்ந்திருத்தலும் பயன்தருவனவாகும். மக்களின் மனமானது, வளைக்கப்படாதவரையில் வலுவுடையதாயிருக்கும் ஒரு வில்லின் தன்மையை யொத்ததாயிருக்கின்றது. என்றாலும், ஒருவன் தன் உள்ளத்தின் ஓட்டத்தை எப்போது தடுத்தாளல் வேண்டும்,' அல்லதை அதனை எப்போது விடுத்தாளல் வேண்டும் எனப் பகுத்துணர்ந்து நடக்கின்றானோ அதுதான் அவனது உணர்வுக்குச் சிறந்த தன்மையாகும். இருவகையிலும் ஒரு கட்டுப்பட்டு நடவாமல் மிகு மும்முரமாய் நடக்கும் ஓர் ஆண்மகனை யான் அறிவேன்; அவனுக்கு நடுப்பட்ட நிலைமையென்பதொன்றில்லை; தான் செய்யுங் கல்விப்பயிற்சியை எப்போது விட்டுவைக்கவேண்டும், மறுபடியும் எப்போது தொடங்கவேண்டுமென்னும் அறிவு அவனுக்கில்லை. அவன் ஏதாவதொன்றை எழுதப்புகுந்தானாயிற், பகற்பொழுதோடு இராப்பொழுதினையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு, தானாகவே களைத்துக் கீழ்விழும் வரையில், தன்னை நெருக்கிப் பிழிந்தபடியாய்ச் சிறிதும் ஓய்வெடாது அதனைச் செய்வன். பிறகு அதனைவிட்டு வேறு முகமாய்த் திரும்புவனாயின், எல்லா வகையான விளை

பாட்டுகளிலும் அவன் ஒரு வரைதுறையின்றிப் புகுந்து ஈடுபட்டிருப்பன்; மீண்டும் அவன் நூல்களைக் கையில் எடுக்கும்படி செய்வது எளிதிற் கூடுவதன்று; என்றாலும், எப்படியோ அவன் திரும்ப நூல் ஓதத் துவங்குவனாயின், அம்முயற்சியில் வரவர அழுந்தி அதனோடு உருகி ஒன்றுபட்டுப் போவன்; அப்போது அவனுடைய அறிவாற்றல்கள் முற்றும் புதுக்கப்பட்டுத் தோன்றும்; தன்னளவுக்கு மிஞ்சியே தான் விழைந்ததனைச் செய்திடுவன். அங்ஙனம் மட்டுப்படாது செல்லுதலால், அவனது கல்விப் பயிற்சியையும் அளவுபடுத்துதல் இயலாது. தனக்குள்ள அறிவாற்றல்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தல் வேண்டும், அவற்றை எவ்வாறு அளவுபடுத்தி நடப்பித்தல் வேண்டும் என்பதனை அவன் எட்டுணையும் அறியான்; அவனது மட்டுப்படா ஆற்றல் அவனுக்கே மாறாய் நின்றது. அவன் அறிவில் வல்லனாயிருந்த தொன்றுமட்டும் அன்று; பேசுதலிலும் எழுதுதலிலும் அவனை ஒப்பாரும் மிக்காரும் எவருமே யில்லை. எனினும், அவனது கூர்த்த அறிவு வெளியே புலப்படுவதில்லை; அது புலப்படுவது ஒரு குற்றமாக அவனது பகுத்தறிவுக்குத் தோன்றியது; ஏனென்றால், ஒளிக்கப்பட்டதைவிட ஒளிர்ந்திருப்பதே தீங்கு பயப்பது. அவன் தான் பேசும் மொழிகளை உழைப்பெடுத்துப் பேசுவதில்லை; கட்டாயமாக இருந்தால் அல்லாமல், அல்லது ஏதேனும் ஊதியம் வருவதாய்க் காணப்பட்டால் அல்லாமல், அவன் தான் வழக்கமாய்ப் பேசும் பெரும்பாட்டையை விட்டுப் பிசகிப்போவதில்லை. எதனாலெனின், தான் பேசும் பொருளை விளக்குதற்குத் துணையாயினல்லது, வெறும் வனப்புக்காக உவமை உருவகங்களைக் கட்டிச்சொல்லுதல் ஆகாதென்பது அவன் கருத்து. ஒழுங்காக இருக்கவேண்டுவதொன்றனைத் திரிபு செய்தலும் பிணித்தலும் அளவுக்கு மிஞ்சி வெறிபிடித்தவர்தஞ் செய்கையேயாமென்று அவன் எண்ணினான்.

வறுமை

“வறுமையானது தகாத செயல்களைச் செய்யும்படி மக்களை ஏவுகின்றது; ஆயினும், நேர்மையுள்ளவர்கள் அத்தகைய செயல்களைச் செய்தல் ஆகாது. வறுமை வந்த காலத்திலே

தான் அவர்கள் தமது மனநிலையை உரப்படுத்துதல் வேண்டும். ஒருவன் பசித்து வருந்தினாலும் பிறரைச் சார்ந்து பிழைத்தல் தக்கதன்று.

வாழ்க்கையே நாடகம்

“நமது உயிர்வாழ்க்கை முழுதும் ஒரு நாடகமே எனக் கருதுகின்றேன். அதில் ஒவ்வொருவனுந் தன்னை மறந்து பிறனொருவனைப்போல் நடக்கப் பாடுபடுகின்றான். நாம் நம்முடைய உண்மை நிலைக்குத் திருப்பமாட்டாதவர்களாய்ப் பிறரைப்பார்த்து அவர்களைப்போல் நடப்பதிலேயே உழைத்து நிற்கின்றோம். இது எதனை ஒத்திருக்கின்றதென்றால், இளஞ்சிறார் தெற்றுவாய் உடைய சிலரைப்பார்த்து, அவரைப்போல் தாமுந் தெற்றித்தெற்றிப் பேசுதலையே ஒத்திருக்கின்றது. அங்ஙனம் அச்சிறுவர் தெற்றித் தெற்றி நெடுகப் பேசிவரவே, சிறிது காலத்தில் அவர்களுந் தெற்றுவாய் உடையராகின்றனர். முதலிற் பழகிய அத் தீயபழக்கம் பின்னர் எக்காலும் மறக்கப்படாத வேறோர் இயற்கையாய் விடுகின்றது.” என்று நாடக நூலாசிரியரொருவர் (Ben Jonson) அறிவுரை புகல்கின்றார்.

ஒரு கிண்ணத் தண்ணீர்

முதலில் ஆடுமேய்க்கும் இடையனாயிருந்து பின்னர்க் கடவுளின் திருவருளால் அரசியல் நிலைக்கு உயர்த்தப்பட்டுச் செங்கோல் செலுத்திய பண்டைக்காலத்து மன்னன் ஒருவன் (David), தன்மேற் பகைகொண்ட வேறொரு கொடுங்கோன் மன்னனாலும் நாகரிகமில்லாக் கொடிய ஒரு கூட்டத்தாராலும் இருபக்கமுந் துன்புறுத்தப்பட்டு, அதனால் தனது அரச வாழ்க்கையைத் துறந்து, தன் அருமைப் பெற்றோர்களைப் பாதுகாவலான ஓரிடத்திற்கொண்டுபோய்வைத்துத், தான் மேய்ப்பனாயிருந்தபோது அறிந்திருந்த ஒருசுக்கான் கல்மலைப்பாங்குசென்று அங்குள்ள குகைகளையே தனக்கு உறைவிடமாய்க் கொண்டிருந்தான். கடவுளின் அருளுக்கு உரியனான இம்மன்னன் இங்ஙனம் ஏழைமை நிலையை அடைந்தானாயினும், அவனது தெய்வத் தன்மையானது அவன்றன் படைவீரர் பலரை அவன்பால் வருவித்தது; மனத்துயர் கொண்டோருங், கடன்பட்டு நொந்தோரும், மனக்குறையுடையோரும் அவன்பால் இருக்

தலை திரும்பி அவனிடம் வந்து குழுமினர்; இவர்களுட் சிலர் படைஞரா யிருந்தகாலத்து வென்றியிற் சிறந்து முதன்மை பெற்று விளங்கினோராவர். இவர்கள் எல்லாருந் தம் இளைய மேய்ப்ப மன்னன் சொல்வழி நடப்பவராய், எவர்க்கும் எந்த வகையிலுந் தீங்கு செய்யாது ஒழுகினோராவர். அவ்விளைய மன்னனோ மிடிப்பட்ட இந்நிலைமையிலும் இறைவனை மறவாதவனாய்த் தனது யாழையியக்கிப் பல அருட்செப்பாடல்களை உளங்கரைந்து பாடும் வழக்கம் மேற்கொண்டான். அன்பும் அருளுந் ததும்பும் அவ் விசைப்பாட்டுகளைக் கேட்ட அப் படைவீரர்களெல்லாருந் தமது வறுமையையுந் துன்பத்தையும் மறந்து, கடவுள்பாற் கசிந்த உள்ளத்தினராகித், தம் மன்னன்பால் நிலைபெற்ற பேரன்புடையரானார்.

இம்மன்னனும் இவன்றன் படைஞரும் அடைக்கலம் புகுந்த அவ்வெறுமலைப்பாங்கு கதிரவன் வெப்பத்தால் அழற்சி மிக்கதாயிருந்தது. அம் மலைமுகட்டினூடிருந்த ஒரு பெரும் பிளவின் அடியிடமெல்லாம் உடைந்த கற்பாறைத் துண்டுகள் இறைந்து கிடந்தன. அதன் இருபுறத்துஞ் செங்குத்தாய் நின்ற கற்சுவர்களின் கரை ஓரத்தில் மலையாடுகள் அடிவைப்பதற்கும் போதுமான இடங்கிடையாது. இத்தன்மைத்தாகிய மலைப் பிளவின்கண் உள்ள ஒரு செங்குத்தான குன்றின் உச்சியிலே தான் அவ்விடைய மன்னன் புகலிடமாய்க் கொண்ட ஒரு கொடுமுடி இன்னுங் காணப்படுகின்றது. அதன் குறுகிய வாயிலினுள்ளே நுழைந்து சென்றால், படியடுக்குகள் உடைய குகையொன்று சிறுகிய வழிகளும் பெருகிய மண்டபங்களும் மாறிமாறி வாய்ந்தனவாய் அமைந்திருத்தல் காணப்படும். என்றாலும், அவ்விடம் நெருக்கமாய் வெப்பம் மிக்கிருந்தது. ஒரு செடிதானும் மரந்தானும் இல்லாமல், ஆள்வழக்கம் அற்றுப், பாழாய், வெய்தென நிற்கும் அவ்விடத்தைத் தனக்குப்புகலிடமாய்க் கொண்ட அவ் இடைய மன்னன், தான் முன்னே அரசாண்ட இனிய செழுமையான நாட்டையும், அதன்கண் ஆங்காங்குப் பச்சைப் பசேலென வளர்ந்திருக்குங் கோதுமைப் பயிர்களையுஞ், சன்னல் பின்னலாய்ப் படர்ந்திருக்குங் கொடிமுந்திரிக் கொடிகளையுங், குளிர்ந்த தீஞ்சுவைத்தண்ணீர்

சுரந்து ஒழுகப்பெறும் வாவிகளையும், அவ்வாவிகளின் நீர்பாய் மடைகளின் பாங்கிருந்து தான் முன்னர் இறைவன்மேல் இசைப்பாட்டுகள் மிழற்றின வகைகளையும் எல்லாம் நினைந்து நினைந்து பெருமூச்செறிந்தான்! எறிந்து "ஐயோ! யான் இருந்து இசைமிழற்றின அந் நீர்நிலையிலிருந்து ஒரு கிண்ணந் தண்ணீர் எவரேனும் எனக்குக் கொணர்ந்து கொடார்களா!" என்று ஆற்றாது கூறினான்.

அச்சொற் கேட்ட அவன்றன் படைஞரில் மூவர் தம் மன்னனது வேட்கையை நிறைவேற்றத் தீர்மானித்தனர். அவர்கள் புகலிடமாய்க் கொண்ட அம்மலையரணுக்கும், அரசன் அத்துணை அவலொடு வேண்டிய நீரினையுடைய வாவிக்கும் இடையே தமக்குப் பெரிதுந் தீங்கிழைத்த கொடிய காடவர் கூட்டம் படைகொண்டிருந்தது. என்றாலுந், தம் தலைவன் மேல் அவர்கள் வைத்த பேரன்பானது அப்பகைவர் கூட்டத்திற்கு அஞ்சுமா! உடனே அம்மூவருந் தாமிருந்த உச்சிமலைப் பிளவினை விட்டுக் கீழ் இறங்கினர். எப்படியோ அவர்கள் அப்பகைவர் தம் படையினூடே சென்று, தம்மரசற்கு விருப்பமான நீரூற்றிலிருந்து நீரை முகந்தெடுத்து, அதனைச் சுமந்த வண்ணமாய் அப்பகைவர் படையினூடுதானே திரும்பிப் போந்து, தமது மலையுச்சியின் கொடுமுடியில் அதனைக் கொணர்ந்து சேர்ப்பித்தனர். தம் தலைவனது வேட்கையை ஆற்றுப்பொருட்டுத் தம்முயிரையும் ஒரு பொருட்படுத்தாது பகைவரூடு சென்று அவர்கள் அந்நீரினைக் கொணர்ந்த செயற்கருஞ் செயலை நோக்கவே, அம்மேய்ப்ப அரசனது நெஞ்சம் நெக்குருகலாயிற்று. அத்துணை அரிதிற்போந்த அந்நீர் மிகவும் புனிதமானதென்றும், அதனைத் தான் பயன்படுத்திக்கொள்ளுதல் தகாதென்றும் அவன் எண்ணினான். எண்ணி அந்நீரினை எடுத்து இறைவனது அருட்குறிமேற் சொரிந்து, தன் பேரன்பிற்கு அறிகுறியான கண்ணீரும் வார்ந்தொழுகிப் பேரின்ப வெள்ளத்திற் படிந்திருந்தான் என்பது.

ஒரு பொன் மீன்

மேலெடுத்துக்காட்டிய பேரன்பினனான இடைய மன்னன் நம் தமிழ் நாட்டுக்கு அயலதான மேல் நாட்டில் இரண்

டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்தவன் ஆவன். அவனையொப்ப இறைவன்பாற் பேரன்பு பூண்டு ஒழுகினோர் இத்தமிழ்நாட்டகத்துப் பலர் பழங்காலத்திருந்தனர். அவருள் ஒருவர் செய்த செயற்கருஞ் செயலை ஈண்டு எடுத்துக்காட்டுவாம். சோழ வேந்தர்களின் தலைநகரங்களில் ஒன்றான நாகபட்டினம் என்பது கடற்கரையை யடுத்துள்ளது. அந்நகரத்தின் கடற்கரையோரத்தின்கண் உளதாகிய செம்படவர் குப்பத்தில், இற்றைக்கு ஓராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுற் செம்படவர் தலைவனை ஒருவர் எல்லாம் வல்ல இறைவன்பால் அளவிறந்த அன்புடையராய் உயிர்வாழ்ந்து வந்தனர். அவர் தம்ஏவல்வழி நிற்குஞ் செம்படவர்களை யெல்லாங் கடன்மேற் கட்டுமரங்களிற் செலுத்திக்கொண்டு சென்று, வலைவீசுவித்துப் பிடிப்பிக்கும் மீன்குவைகளை விற்றுப், பெற்ற பொருளைத் தம்மவருந் தாமுமாகப் பங்கிட்டுச் செல்வம் உடையராயிருந்தனர்.

இவர் மீன் பிடிக்கும் வாழ்க்கையில் இருந்தனராயினும், எல்லாம் வல்ல இறைவன் நிலையினை யுணர்ந்து, அவன் திருவடிக்கண் அழுந்தின அன்பு வாய்ந்தவர். ஆகவே, தம்மவர் பிடித்துக்கொணரும் மீன் தொகுதியுள் ஒரு தலைமீனையெடுத்து அஃது இறைவனுக்குரியதென நினைந்து, அதனைக் கடல்நீரில் மீண்டுஞ் செல்கவென விட்டுவருதலை நாடோறும் மாறாமற் செய்துவந்தார்.

இங்ஙனஞ் செய்துவருகையில், ஏது காரணத்தாலோ மீன்கள் மிகுதியாய் அகப்படாமற் செம்படவர் தமதுவலைவளஞ் சுருங்கிப், பட்டினியும் பசியுமாய்க் கிடந்து துன்புறலானார். அங்ஙனந் தம்மவர் துன்புறுங்காலத்தும், அவர்தந் தலைவரான அன்பர் முதல் வலையில் ஒரு மீனே அகப்பட்டாலும், அஃது இறைவற்கே யுரியதென அன்பொடு நினைந்து, அதனைக் கடலின்கண் உயிரொடு விடுத்துவந்தார். நாளேற நாளேற இவரது செல்வமுஞ் சுருங்கிவிட, இவர் உடல் தளர்ந்து வருந்தினாலும், மனஞ் சிறிதுந் தளராராய் மகிழ்ந்து, முதலில் அகப்படும் ஒரு மீனையும் ஒவ்வொரு நாளுங் கடலின்கண் உய்த்தலிற் சிறிதும் வழுவாது ஒழுகலாயினர். கடைமுறையாக வீசுவித்த பல

வலைகளுள் ஒரு வலையிற்பட்ட ஒரு மீனைத்தவிர, வேறொரு சிறுமீன்றானும் வேறு வலைகளுள் அகப்பட்டிலது. எனினும், ஒரு வலையில் அகப்பட்ட அவ்வொரு மீனையும் அவர் மிக்கதொரு களிப்புடன் எடுத்துப்பார்க்க, அஃது ஒரு பெரிய தேயத்தையே விலைகொள்ளத்தக்க சுடர்விரி பசும்பொன் வடிவினதாய்த் திகழ்ந்தது.

அப் பொன்மீன் அகப்பட்ட நேரம் எத்தகைய மனவுறுதியுடையார் மன நிலையினையுங் கலக்கும் வலிமை வாய்ந்தது. செம்படவர் தலைவனை அவ் அன்பரோ மிகவும் மிடிபட்டுத் தங் குடும்பத்தவரொடு பல நாட்கள் பட்டினியும் பசியுமாய்க் கிடந்து இடருழந்து வருகின்றார். தம்முடைய துன்பத்தை ஒருபொருட்டாகக்கருதாது, தமது ஆளுகைக்கீழுள்ள ஏனைச் செம்படவர் படுந்துயரத்தைக் கருதும் அருண்மாட்சியுடையராகலான் அவர் பொருட்டாகவாவது அப்பொன்மீனை விலை செய்து, அவர் அச்செம்படவரது மிடிவாழ்க்கையை மாற்றற்பாலார். மற்று, அச் செம்படவர்களோ தாங்குதற்கரிய தமது வறிய நிலையினைக் கருதித், தம் தலைவன் இப்போதாயினும் இவ்வொருமீனை விற்றுத் தம்மைப் பாதுகாப்பரோ, அன்றி என்றும்போல இதனையுங் கடற்கண் விடுத்திடுவரோ என்னும் ஐயத்தால் ஏங்கிய நிலையினராய், அவர் இனிச் செய்யப்போவதனை எதிர்பார்த்துக் கண் இமையாது நிற்கின்றனர். அப்பொன்மீனைக் கையிலெடுத்த சில்லிமைப்போழ்தில் எத்தனையோ பல எண்ணங்கள் மின்னொளியினுங் கடிதி அவர்தந் தலைவன் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன "என்கீழ்க் குடிகளான இச்செம்படவர் எத்தனையோ பல நாட்களாக வலைவளங் குன்றிப் பட்டினியும் பசியுமாய்க் கிடந்துவருகின்றார்கள்! என் கொள்கை தவறாமல், நாடோறும் அகப்படும் ஒரு மீனையும் இறைவற்கென்று கடலின்கண் யான் விடுத்து வருதலைக் கண்டும் என்னை வெறுத்திலர்! இவ்வொரு மீன் விலையால் இவர்கள் எல்லாரின் மிடியும் அற்றுப்போவது திண்ணமே. ஆனாலும், இஃது இறைவற்கு உரியதன்றோ! இதனை விற்றற்கும், இவர்களைப் பாதுகாத்தற்கும் யான் யார்? யான் பிறக்கும் முன்னும், யான் இறந்த பிறகும் இவர்களைப் பாதுகாத்தவர் பாதுகாப்பவர்

கடவுளா? யானா? என் மனைவி மக்கள் பெற்றோர் உற்றாரெல்லாம் என்கீழ்க் குடிகளைப்போல் அல்லர்; முற்றும் என்னைச் சார்ந்து பிழைப்பவர். இவர்கள் பொருட்டு இதனை விற்றல் இறைவன் திருவுளத்திற்கு இசையுமா? கண்ணெதிரே என் உதவியைப் பெரிது வேண்டி நிற்கும் இவர்கட்கென்று இதனைப் பயன்படுத்தாமற், கட்புலனாகாக் கடவுட்கென்று இதனைக் கடலின்கண் விடுத்தல் பயன்தருமா? இத்தனை நாளாக மிடிப்பட்டு வருந்தும் இவர்கள் அனைவரின் நிலைமையும் ஓராமலே இறைவற்கென்று அரிது அகப்பட்ட ஒரு மீனையும் விடுத்து வந்த யான் இன்றைக்குமட்டும் இப்பொன்மீனைக் கண்டு பேரவாக்கொண்டு இறைவனை மறந்து இவர்களை நினைதல் பிழையன்றோ? இவர்களது துயர் ஒருபுறம் இருக்க. எனக்கு அரிதிற்கிடைத்த இம்மக்கள் யாக்கை இறைவன் தந்ததன்றோ? இதனைப் பாதுகாவாது, யான் ஏதோ விடாப்பிடியாக்கொண்ட ஒரு கொள்கைக்காக மிடியால் இதனை அழித்துவிடுதல் ஐயன் அருளுள்ளத்திற்கு அடுக்குமா? எனக்கும் என்னைச் சேர்ந்தார்க்கும் என்கீழ்க் குடிகட்கும் பிறக்குமெல்லாம் வந்த இத்தீரா வறுமையினை இவ்வொரு பொன் மீன் தீர்த்து எல்லாரையும் இன்பவாழ்வில் வைக்குமென்றால், இதனைக் கடலின்கட் போக்குதல் தக்கதாமா? நல்லது, இவ்வெல்லார் வறுமையையுந் தீர்த்து, இவர்கள் எல்லாரையும் பாதுகாத்தல் வேண்டி, என் கொள்கைக்கு மாறாக இப் பொன்மீனை விற்கத் துணிவேனாயின், இதனை விற்கப்போம்போதோ, விற்றுப் பொருளொடு திரும்பும்போதோ, திரும்பி எல்லார் வறுமையுந் தீர்க்கும்போதோ, அது தீர்ந்து எல்லாருங் களித்திருக்கும்போதோ ஒரு கடும்புயற்காற்றும் விடாப்பெருமழையுங் கதுமெனத்தோன்றி, எமது மணற்குப்பத்தை வாரிக் கரைத்துக்கொண்டுபோய்க் கடலின்கண் எம்மை அடங்க அமிழ்த்தியழித்தால், அவரும் யானும் என்செய்யக் கூடும்! அல்லது இக்கடல் நீரே காற்றாலும் மழையாலும் வரைகடந்து பொங்கியெழுந்து போந்து எம்மை யெல்லாம் ஒருங்கே யழித்துச்சென்றால், யான் என்னைக் காப்பதும் எம் உறவினர் சுற்றத்தாரைக் காப்பதும் எங்ஙனங்கைகூடும்! எல்லா மக்களையும், மக்களினுந்தாழ்ந்த எல்லா

உயிர்களையும் எவன் படைத்தானோ, அவனே அவர்களையும் அவைகளையுங் காத்தற்கும் அழித்தற்கும் உரியவன். எல்லா உயிர்களையுங் காத்தற்கு ஏற்ற பேராற்றல் எம் ஆண்டவன் ஒருவனுக்கே யிருக்கப், பிற உயிர்களின் உதவியுந் துணையும் இன்றிப், பிறபொருள்களின் சேர்க்கையும் பானுமின்றி என்னையே காத்துக்கொள்ள மாட்டாத யான், என்னவரைக் காக்குங் கடமையுடையேன் எனப் பிழைபட எண்ணி, எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு இத்தனை காலமாகச் செய்துவந்த செயலினின்று இப்போது மாறப்பெறுவேனோ!" எனத் தொடர்பாக நினைந்தொரு முடிவுக்கு வந்தவுடனே, "என்றும்போல இன்றும் இப்பொன்மீன் எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடிக்கே உரித்தாகற்பாலது!" என நெஞ்சங்குழைய மொழிந்து, அதனைக் கடலின்கண் விடுத்திட்டாரென்பது.

காடு

மரங்கள் அடர்ந்த நிலப்பகுதியே பெரும்பாலுங் 'காடு' என வழங்கப்பட்டு வருகின்றது. காடுங் காடுசார்ந்த இடமும் 'முல்லை' யெனப் பெயர்பெறுமென்று தமிழ் நூல்கள் கூறாநிற்கும். பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டை 'வல்லை' என்றும், சிறுமரங்கள் மிடைந்த காட்டை 'இறும்பு,' 'குறுங்காடு' என்றும், சிறு தூறுகள் பம்பிய காட்டை 'அரில்,' 'அறல்,' 'பதுக்கை' என்றும், மிகமுதிர்ந்து முற்றிப்போன மரங்களையுடைய காட்டை 'முதை' என்றும், மரங்கள் கரிந்துபோன காட்டைப் 'பொச்சை,' 'சுரம்,' 'பொதி' என்றும், அரசனது காவலிலுள்ள காட்டைக் 'கணையம்,' 'மிளை,' 'அரண்' என்றும் பண்டுதொட்டுத் தமிழ்மக்கள் வழங்கிவந்திருக்கின்றனர்.

இங்ஙனம் பலவகையால் வழங்கப்படுங் காடுகளிற் பெரும்பாலன, மலைகளின் மேலும் மலைகளின் கீழும் மலைச்சார்ந்த இடங்களிலுமே காணப்படுகின்றன. சிறுபான்மைய கடல் சார்ந்த இடங்களில் இருக்கின்றன. திருமறைக்காடு (வேதாரணியம்) என்னுஞ் சிவபிரான் திருக்கோயில் உள்ள ஊரை யடுத்த காடு கடலடுத்த நிலத்தின்கண் உள்ளது. பனங்காடு,

உடைவேலங்காடு முதலியன பாண்டிநாட்டில் இராமேசுவரம் திருச்செந்தூர் முதலியவைகட்கு அண்மையவான கடல்சார்ந்த இடங்களில் மிகுதியாய் உள்ளன.

வான் அளாவிய மரங்கள் அடர்ந்து, தொலைவிலிருந்து நோக்குவார்க்குப் பசுந்தழைப் போர்வையுடன் தோன்றி, அவர்தங் கண்ணையுங் கருத்தையுங் கவர்வனவாய், அருகே சென்று தம்முள் நுழைந்து நோக்குவார்க்குப் பலவேறு வகையான பருத்துயர்ந்த மரங்களுஞ் செடிகொடிகளும் வாய்ந்தனவாய், உள்ளே செல்லச்செல்ல இருண்ட இடங்களும் இடையிடையே பகலவன்வெளிச்சம் படிஞ் சந்துவெளிகளுந் தம்மகத்து உடையனவாய், நீர் ஊற்றுகளுஞ் சிற்றருவிகளும் ஆங்காங்கு அமையப்பெற்று அவற்றை யடுத்துள்ள மரஞ் செடிகொடிகளிற் பலவகைப் பறவைக்கூட்டங்களும் அவற்றின் ஒலிகளும் நிரம்பப்பெற்றனவாய்த், தம்முட்செல்வாரின் உள்ளத்தை அச்சுறுத்தும் யானை புலி கரடி பெரும்பாம்புகளின் அடிச்சுவடுகளும் உடற்பதிவுகளும் பொருந்தினவாய்ச், சருகுகள் பூக்கள் கனிகள் வித்துகள் இடந்தோறும் உதிரப்பெற்றனவாய், இடையிடையே பட்டு வீழ்ந்து உள் இயங்குவாரின் வழிகளை மறிக்கும் உலர்ந்த மரங்களுங் கோடுகளும் வளார்களும் முட்களும் வேர்களுங் கொடிகளுந் துதைந்தனவாய் உள்ள பெருங்காடுகளைப் புனலூர், நீலமலை, திருக்குற்றாலமலை, அழகர்மலை, பாவநாசமலை, வெள்ளிமலை, மருதமலை, சேர்வராயன்மலை, இமயமலை முதலான மலைப்பாங்குகளுக்கு யாம்சென்ற காலங்களிற் கண்டு, முன்னறியாத ஒரு பெருமகிழ்ச்சியும் இறும்பூதும் எய்தினேம். இத்தகைய பெருங்காடுகளைப் பாராதவர்களுக்கு, ஓரறிவு உயிர்களின் அமைப்பில் இறைவன் தோற்றுவித்திருக்கும் வனப்பும் உயர்ந்த காட்சியும் வியப்பும் பயனும் ஒரு சிறிதுமே விளங்கா.

கானகத்தின் கவினைக் கானகத்திலன்றி வேறெங்குங் காணல் இயலாது, எத்தனை வடிவான இலைகள்! எத்தனை நிறமான மலர்கள்! எத்தனை சுவையான காய்கள்! எத்தனை இனிப்பான பழங்கள்! எத்தனை வகையான மரங்கள் செடிகள் கொடிகள்! அம்மம்ம! இறைவன் படைப்பின் பலவேறு வகையான வியத்தகு அமைப்பும் அழகும் ஒருங்குபொதுளிய அடவிகளின் விழுமிய தன்மையை எங்ஙனங் கூறுவேம்! எவ்வாறு காட்டுவேம்! கானகங்களின் அடர்ந்துயர்ந்த தோற்றத்தைக் காண்கையில் உள்ளமும் உணர்வும் மேலுயர்ந்து செல்கின்றன! வியப்பும் புதுமையுங் கருத்தைக் கவர்ந்தெழுகின்றன!

அவைமட்டுமோ! நின்ற நிலையில் நிற்கும் மரஞ் செடிகொடிகளாகிய ஓரறிவுயிர்கள், இடம்விட்டுப் பெயரும் ஏனை உயிர்களுக்கு எத்தனை வகையிற் பயன்படுகின்றன! நீருநிழலும் உணவுந் தூய காற்றும் அவைகள் அனைத்துயிர்கட்கும் அளித்து வருகின்றன காண்மின்கள்! காடுகள் இல்லையாயின், வெய்யவன் சுடுகதிர்களால் வெதுப்பப்படும் இந்நிலம் நீர்ப்பசையற வறண்டுவிடும்; ஆவியாகமாறி வானின்கட்சென்ற நீர் குளிர்காற்று வீசுதற்கு வழியின்மையால் திரும்ப மழையாதக் கீழ் இறங்கா. இறங்காவாகவே, உணவுப்பண்டங்களைத் தரும் மரஞ் செடி கொடிகளும் ஏனைப்பயிர்களும் உண்டாகா. இவ்வுண்மை, காடுகளை அழித்துவிடும் இடங்களில் மழை அருகிப்போதலால் நன்கு தெளியப்படும்.

உணவேயன்றி, நமதுயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத தூய காற்றுங், காடுகளில் துவன்றிய மரஞ் செடி கொடிகளாலேயே நாம் வரப்பெறுகின்றேம். இவ் ஓரறிவுயிர்த்தொகுதிகள் மிகுந்தில்லாமல், ஏனை உயிர்த்தொகுதிகளே எங்கும் மிகுந்திருக்குமாயின் இவை வெளிவிடும் நச்சுக்காற்றை இவ்வுயிர்களே மீண்டும் மீண்டும் உட்கொண்டு, அதனால் நோய்ப்பட்டுச் சிலநாட்களில் இறந்தொழியும். மற்றுக் கானகங்களிலும் பிற இடங்களிலும் உள்ள மரஞ் செடி கொடிகள் பயிர்களோ ஈரறிவு முதல் ஆறறிவு ஈறாக உடைய ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நடப்பனவாகிய சிற்றுயிர்கள், பறவைகள், விலங்குகள், மக்கள் முதலான இயங்குமுயிர்கள் வெளிவிடும் நச்சுக்காற்றை உள்ளிழுத்து, அதன் நச்சுத்தன்மையை நீக்கித் தூய காற்றை வெளிவிட்டு அதனை எங்கும் பரவச்செய்கின்றன. இவ்வுண்மை, பயிர்பச்சைகள் இல்லாத நகரங்களில் இருப்பவர்கள் அடுத்தடுத்து நோய்களாற் பற்றப்பட்டு விரை

யில் மாய்ந்துபோதலாலும், மரஞ் செடி கொடிகள் நிறைந்த காட்டுப்புறங்களில் இருப்பவர்கள் நோயில்லா யாக்கையினராய் நீண்டகாலம் நன்கு உயிர்வாழ்தலாலும் இனிதறியப்படும்.

இனி, உலகத்திலே மிகப்பெரிய காடுகள், வட அமெரிக்காப் பெருந்தேயத்தின் ஒரு பகுதியாகிய 'கனடா' நாட்டின் கண்ணேதான் இருக்கின்றன. இங்குள்ள காடுகளின் அளவு முந்நூற்று எழுபத்தைந்துகோடி காணிகளாகுமென்று கணக்கெடுத்திருக்கின்றார்கள். தென்னமெரிக்கா தேயத்திலும் இத்துணைப்பெரிய காடுகள் இருந்தாலும், அவைகளில் மரங்கள் மிக அடர்ந்திருத்தலாலுங், கொடிய காட்டுவிலங்குகளும் நச்சுப் பெரும்பாம்புகளும் மிகுந்திருத்தலாலும் அவற்றினுள்ளே மக்கள் நுழைந்து சென்று பார்த்தலும் அவற்றை அளவெடுத்தலும் இயலவில்லையென்று ஆராய்ந்துபோய்க் காணும் ஆசிரியர்கள் அறிவிக்கின்றார்கள். ஐரோப்பாப் பெருந்தேயத்தின் வடபகுதியில் உளதாகிய உருசியா தேயத்திலும் மிகப்பெரிய காடுகள் இருக்கின்றன வென்றும், அவற்றின் அளவுஞ் சிறிதேறக்குறைய முந்நூற்றெழுபத்தைந்துகோடி காணிகளாகுமென்றும் இத்துறையில் வல்ல அறிஞர் கணக்கெடுத்துரைக்கின்றனர்.

இனி, உயரத்திலும் பருமனிலுங் குறைந்த அளவினவான மரங்கள் நிறைந்த குறுங்காடுகள் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. திருமறைக் காட்டிற்குங் கோடியக்கரைக்கும் இடையிலுள்ள காட்டைக் குறுங்காடு என்றே கூறுதல் வேண்டும். இராமேசுவரத்திற்கும் பாம்பனுக்கும் இடையிலுள்ள காடுங் குறுங்காடேயாகும். திருச்செந்தூரையடுத்த நெய்தல்நிலப் பகுதிகளிலுள்ள பனங்காடு உடைவேலங்காடுகளுங் குறுங்காட்டிற் சேர்ந்தனவேயாகும்.

இனிச், சிறு தூறுகளுங் குறுஞ்செடிகளும் பம்பிய காடுகளும் எங்கும் உண்டு. யாமிருக்கும் இப்பல்லவபுரத்திற்கு அருகாமையில் தூறுகளுஞ் சிறு செடிகளும் நிறைந்த ஒரு நீண்டகன்ற காடு உளது. இன்னோரன்ன சிறு காடுகள், மேற்கூறிய பெருங் குறுங்காடுகளைப்போற், காட்சிக்கு இனியன

வாய் இல்லாவிடினும், நிலத்தின் வறட்சியைத் தணித்து, ஏழை யெளியவர்கள் விறகுவெட்டி விற்றுப் பிழைப்பதற்குப் பெரிதும் உதவியாகின்றன.

இனி, மிக முதிர்ந்து முற்றிப்போனமையால் அடர்ந்தில்லாமல் அலைசலாயிருக்கும் இலைகளையுங், அவ்விலைகள் தாமும் இல்லாமல் வெறுங் கோடுகள் கொம்புகளையும் உடைய பரிய மரங்கள் நிறைந்த காட்டின் பகுதிகளைக், கோயம்புத்தூர்க் கடுத்த வெள்ளிமலைப் பெருங்காட்டில் இடையிடையே கண்டு வந்தேம். தழைந்த பசியமரத்தொகுதிகளைக் கண்டுகளித்த கண்களுக்கு, வற்றலாய் நிற்கும் இம்மரங்களின் தோற்றம் வருத்தத்தை விளைவித்தது. செல்வத்தின் செழுமையாற் கிளைஞருந் நண்பருஞ் சூழ வாழ்ந்துவந்தவர் ஒருசிலர் சிறிது காலத்தில் அச்செல்வத்தையிழந்து, சுற்றத்தார் எவருமின்றி, உடம்பின் ஒளியும் உள்ளக்கிளர்ச்சியும் அற்றுத் தனிநிற்றல்போலவும், இளமையும் அழகுந் துலங்கத் தலைமையில் வீறிநின்றார் பிறர் சிலர், அவ்விளமையும் அழகுந் தலைமையு மாறி வற்றிய யாக்கையினராய் வருந்திநிற்றல்போலவும், பச்சென்று பொதுளிய இளந்தழைகள் உதிர்ந்து புட்களும் விலங்கினங்களும் அணுகப்பெறாமல் நீர்ப்பசையற்று வறியார்களாகிய பழுத்த தலையிர்கள் காற்றில் அலையக் கோடுகளாகிய கைகளை நீட்டி விரித்துத் துயர வாட்டத்தைக் குறிப்பனவாய்க் காணப்பட்ட அம்மரங்களின் தோற்றம், உயர்நிலை விரைவில் மாறப்பெறும் மக்களின் இவ்வுலகவாழ்வின் நிலைமையைக் குறிப்பதொன்றாகவே எமக்குந் தோன்றியது.

இனிக், கரிந்த மரங்களையுடைய பொச்சைக்காடுகள் கதிரவன் வெப்பத்தாற் கனன்றுகொண்டிருக்கும் மணல்வெளிகளாகிய பாலை நிலங்களிலேதாம் அருமையாய்க் காணப்படும்.

இனி, முதலிற்கூறிய பெருங்காடுகளெல்லாம், பெரும்பாலும் ஆங்காங்கு அரசுசெலுத்தும் அரசர்களின் காவலில் வைக்கப்பட்டு, அவர்கட்குப் பலவகையில் ஏராளமான வருவாயைத் தந்து வருகின்றன. காடுகளில் மிகுதியாக வளருந் தேக்கு, பாலை, புதிரை, ஆச்சா முதலான மரங்கள் வீடுகள், தொழிற்சாலைகள், கப்பல்கள், படகுகள் முதலியன அமைப்

பதற்கேற்ற வழியை வாய்ந்து நீண்ட காலங் கெடாதிருப்பனவாதலால், அவற்றால் அரசர்க்குக் வரும் வருவாய் மிக்க அளவினது. மேல்பால் உள்ள சாலடி நாட்டில் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்குமுன் நாகரிகத்திற் சிறந்துவிளங்கிய அரசர்கள் அமைத்த பெரிய கோயில்களும் அரண்மனைகளும், நமது தமிழ்நாட்டின் மேல்கரைமலைகளில் வளராநின்ற தேக்குமரங்களைக்கொண்டே கட்டப்பட்ட பான்மையினைப் பழைய வரலாற்று நூலாசிரியர்கள் கண்டறிந்திருக்கின்றார்கள். இம்மரங்களையன்றி அகில் சந்தனம் முதலான மணங்கமழ் மரங்களும், விலையுயர்ந்த யானைகளும் யானைக்கொம்புகள் எலும்புகளும், மான்றோல் புலித்தோல்களும், மயிற்றோகைகளும், தேன் தேன்கூண்டுகளும், அரக்கும், நாவியும், பல்வகைக் காய்கனி கிழங்குகள் வித்துக்களுங் காட்டின்கணிருந்து நிரம்பப்பெறுதலின், இவைகளாலும் அரசர்கள் மிகுந்த வருவாயை அடைகின்றனர் என்பது.

நீண்டகாலக் கடன்

கதை நூலாசிரியர் ஒருவரை ஒருநாள் ஓர் இரவலன் எதிர்ப்பட்டனன். உடனே அவன் தனக்குக் கால்ரூபா உதவி செய்யும்படி அவரை விடாப்பிடியாய்க் கெஞ்சிக்கேட்டு நெருக்கினான். அவர் தமது சட்டைப்பையினுட் கையை நுழைத்துத் தடவ, அதன்கட் சில்லறையில்லாமல் ஒரு முழு அரை ரூபா மட்டும் இருக்கக்கண்டார். அவர் அதனையெடுத்து அவ்விரவலனுக்குக்கொடுத்து, "நீ எனக்கு மிச்சங் கால் ரூபா கடன் கொடுக்கவேண்டியிருப்பதை மறவாதே." என்று கூறிப் புன்னகை புரிந்தார். அதற்கு அவன் "அப்படியே, பெருமானே. யான் அக்கடனைத் தங்கட்குத் திருப்பிக்கொடுக்கும் வரையில் தாங்கள் உயிரோடிருப்பீர்களாக!" என்று மறுமொழி நுவன்று சென்றான்.

ஞாயிறுந் திங்களும்

ஒருகால் நண்பர் இருவர் ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்) என்னும் இரண்டில் எது பயன்மிகவுடையது என